‘மக்களைத் தேடி மருத்துவம்’ எனும் திட்டம் பற்றி அமெரிக்காவில்

# ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றுகிறார்!

## நோய்த்தடுப்பு மருந்துப் பெட்டகத்தினை சென்னை நிகழ்ச்சியில் வழங்கி தகவல்!



சென்னை, ஜூலை 2-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (01.07.2024) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், கன்னிகாபுரத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை சார்பில் நடைபெற்ற வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம் மற்றும் வைட்டமின் ஏ முகாமினை தொடங்கி வைத்து, அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு சென்று ஓ.ஆர்.எஸ் கரைசல் மற்றும் வைட்டமின் ஏ திரவம் அடங்கிய மருந்துப் பெட்டகத்தினை வழங்கினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் விழகாட்டுதலின்படி, வயிற்றுப்போக்கு தடுப்பு முகாம்கள் தமிழ்நாடு முழுவதிலும் இன்று 01.07.2024 தொடங்கி 31.08.2024 வரை நடைபெற உள்ளது. இந்த முகாம்களைப் பொறுத்தவரை துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள் என்று தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இம்முகாம்கள் தொடர்ச்சியாக நடைபெற இருக்கிறது. 5வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பிற்கு பெரும்பகுதியான காரணமாக கருதப்படுவது வயிற்றுப் போக்கு.

எனவே இந்த வயிற்றுப்போக்கினை தடுத்திடும் வகையில் ORS பொட்டலங்கள் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் சேவைகள் கழகத்தின் சார்பில் கொள்முதல் செய்யப்பட்டு 45.31 இலட்சம் பொட்டலங்கள் இந்த மையங்களின் மூலம் விநியோகிக்கப்பட உள்ளது. மேலும் ரூ.1.68 கோடி மதிப்பீட்டில் ஜிங்க் மாத்திரைகளும் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டில் 58.33 இலட்சம் குழந்தைகள் பயன்பெற இருக்கிறார்கள். இந்த 5வயதிற்குட்பட்ட குழந்தைகள் உள்ள வீடுகளில் அங்கன்வாடி பணியாளர்கள் மூலம் ஒவ்வொரு வீட்டிற்கும் தலா 2 ORS பொட்டலங்களும், 14 துத்தநாக (ஜிங்க்) மாத்திரைகளும் வழங்கப்படவுள்ளது. அதோடுமட்டுமல்லாமல் இந்த ஒரு மாதம் காலம் சுத்தம் மற்றும் சுகாதாரத்திற்கான விழிப்புணர்வை மேற்கொள்வது, வயிற்றுப்போக்கு தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது குறித்து விழிப்புணர்வு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவிருக்கிறது.

பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் கை கழுவது குறித்த செயல்விளக்கமும் மேற்கொள்ளப்படவிருக்கிறது. கை கழுவது தொடர்பான விளக்கங்களுடன் கூடிய சுவரொட்டிகளும் கை கழுவும் இடத்தில் ஒட்டப்பட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவிருக்கிறது. ORS மாத்திரைகள் இரண்டு மாதத்திற்கு கீழ் உள்ள குழந்தைகளுக்கு 5 தேக்கரண்டி அளவுக்கும், 2 மாதம் முதல் இரண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 50 மி.லி கிராம் முதல் 100 மி.கி வரைக்கும் இரண்டு வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 100ML முதல் 200ML வரை குழந்தைகளுக்கும் தருகின்ற நிகழ்வு இன்று தொடங்குகிறது.

வயிற்றுப்போக்கின் போது ஒவ்வொரு முறையும் மலம் கழித்த பின்னரும், வயிற்றுப்போக்கு நிற்கும் வரையில் ORS கரைசல் கொடுக்கப்பட வேண்டும். துத்தநாக மாத்திரையைப் பொறுத்தவரை 2 முதல் 6 மாதம் வரை உள்ள குழந்தைகளுக்கு அரை மாத்திரை சுத்தமான தண்ணீரிலோ அல்லது தாய்ப்பாலில் கலந்தோ தொடர்ந்து 14 நாட்கள் கொடுக்கப்பட வேண்டும். 6 மாதம் முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சுத்தமான தண்ணீரில் தொடர்ந்து 14 நாட்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். இதோடுமட்டுமல்லாம் வைட்டமின் A பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கும் மாத்திரைகள் வழங்கப்படுகிறது. வைட்டமின் A குறைபாட்டினால் பார்வை இழப்பு ஏற்படும். எனவே உலகளவில் 2019ஆம் ஆண்டு 2.5 இலட்சம் முதல் 5 இலட்சம் வரை குழந்தைகளுக்கு பார்வை இழப்பு பாதிப்புகளுக்கு உள்ளாக கூடிய நிலை உள்ளது என கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை ஆண்டொன்றிற்கு 17.54 % விட்டமின் A குறைபாட்டினால் பார்வை இழப்பு என்பது இருந்து வந்தது.

தமிழ்நாட்டினைப் பொறுத்தவரை அதில் 3ல் ஒரு பங்காக 7% பார்வை இழப்பு இருந்து வருகிறது. அதற்கான காரணமாக பொது சுகாதாரத்துறையில் வைட்டமின் A பாதிப்பு கட்டுப்படுத்துவதற்குரிய மாத்திரைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 7% பாதிப்புகள் முற்றிலுமாக குறைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது. மேலும் ஜிங்க் மாத்திரைகள் என்பது 01.07.2024 தொடங்கி 31.08.2024 வரை நடைபெறும். வைட்டமின் A திரவம் வழங்கும் நிகழ்வு என்பது 01.07.2024 தொடங்கி 31.07.2024 வரை நடைபெற இருக்கிறது.

### சிறுவன் இறப்பு குறித்தான கேள்விக்கு பதில்!

பத்திரிக்கைகள் மற்றும் ஊடகங்களிலும் இதுபற்றிய தவறான புரிதல் என்பது இருந்துக்கொண்டிருக்கிறது. அந்தப்பகுதியில் 625 வீடுகள் இருக்கின்றது. அமித்காலனி பகுதியில் அனைவரிடமும் குடிநீரில் கழிவுநீர் கலந்து வருவது தொடர்பான புகார் இருந்து வந்தது. அப்பகுதியில் உள்ள பொதுமக்களிடம் நானும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரும், உணவுப்பாதுகாப்பு ஆணையரும் இணைந்து ஆய்வு செய்து சென்றோம். அப்பகுதி மக்கள் சொன்னது, காலையில் தண்ணீர் பிடிக்கும் போது காலை 09.30 முடியும் தருவாயில் குடிநீர் கருப்பு நிறத்தில் வருவதாக சொன்னார்கள், பொதுவாக பிரதான பைப்லைன்களில் வரும் குடிநீர் முதலில் வரும் போது தெளிவாகவும், இறுதியில் வரும்போது பைப்பில் உள்ள கசடுகள் மூலமாக வரும்போது நிறம் மாறுகிறது என்று அலுவலர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும் அதன்மூலம் எந்த வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்று சொல்கிறார்கள். குடிநீரில் கழிவுநீர் கலந்ததால் பாதிப்பு என்றால் 2500 பேர் இந்த பகுதிகளில் இருக்கிறார்கள். வேறு யாருக்கும் இந்த பாதிப்பு ஏற்படவில்லை.

குழந்தை இறந்ததை பார்க்க வந்த அரசியல்வாதி ஒருவர் இந்த குழந்தையை எழும்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், அங்கு ரூ.2000 பணம் கேட்டதாகவும் சொல்லியிருக்கிறார். இந்த குழந்தையை எழும்பூர் அரசு குழந்தைகள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லவில்லை, இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் தான் சிகிச்சை பலனளிக்காமல் அக்குழந்தை இறந்திருக்கிறது. குழந்தைக்கான போஸ்ட் மார்ட்டம் அறிக்கை இன்னும் இரண்டு நாட்களில் வரவிருக்கிறது. இறந்த சிறுவனின் தங்கையைத் தான் எழும்பூர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். இம்மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றிருப்பதனால் இவர்கள் பீகாரில் இருந்து வந்திருப்பதால் ரூ.1000 அட்வான்ஸ் கேட்டிருக்கிறார்கள். அதாவது மொத்தம் Testக்கான தொகையாக ரூ.2000 வரை கேட்டிருக்கிறார்கள்.

இதனை பத்திரிக்கைகளில் அரசு மருத்துவமனையில் ரூ.2000 இலஞ்சம் கேட்டதாக செய்தியினை வெளியிடுகிறார்கள். உண்மை நிலவரம் என்னவென்றால் இந்தியா முழுவதும் உள்ள 36 மாநிலங்களிலும் அரசு மருத்துவமனைகளில் அந்தந்த மாநில மக்களுக்கு மட்டும்தான் இலவச மருத்துவச் சேவை. அண்டை மாநிலங்களிலிருந்து யாராவது வந்தால் பணம் கொடுத்து தான் மருத்துவச் சேவை பெற முடியும். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தான் இந்தியாவிலேயே முதன்முறையாக இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டத்திற்கு அந்த Systemத்தையே மாற்றினார்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலகிலிருந்து எந்த நாட்டினர் வந்தாலும் விபத்து பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். இது இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அல்ல. இப்போதும்கூட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை ஒன்று வைத்திருக்கிறோம். அண்டை மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு சிகிச்சைக்கு வருவோர்களுக்கு இலவசமாக சிகிச்சை அளிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டிருக்கிறோம். இது இந்தியா முழுமைக்கும் உள்ள பிரச்சினை. ஆகையால் இதுபோன்ற தகவல்களை முழுமையாக புரிந்து கொள்ளாமல் பதட்டத்தில் செய்திகளை வெளியிட்டு பொதுமக்களை பதட்டத்திற்கு உள்ளாக்குவதால் என்ன நன்மை இருக்கப்போகிறது?

### அமெரிக்காவில் ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம்!

உலக வங்கியில் ரூ.2,700 கோடி நிதி உதவி பெறப்பட்டு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் கட்டிடங்கள் கட்டி முடித்து விட்டு மருத்துவ உபகரணங்கள் வாங்கப்பட்டு இன்றைக்கு உலகத்தரத்தில் தமிழ்நாட்டின் மருத்துவம் பெரிய அளவில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த பணிகள் எல்லாம் முடிந்து விட்டது. எனவே எதிர்கால தேவை என்று கருதி ரூ.3,000 கோடி திட்ட மதிப்பீடுகள் தயாரித்திருக்கிறது. அதற்காக அமெரிக்கா வாஷிங்டனில் இருக்கும் தலைமை அலுவலகத்தின் தலைவர் மற்றும் துணைத்தலைவரை சந்தித்து நிதி கோர இருக்கிறோம்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஹார்வார்டு பல்கலைக்கழகம் (Harvard University and Boston Children’s Hospital) பாஸ்டன் என்கின்ற பகுதியில் இருக்கிறது. மேலும் ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற இந்த தலைப்பில் நான் உரை நிகழ்த்த உள்ளேன். Tamilnadu Emergency response system என்கின்ற தலைப்பில் நம்முடைய துறையின் செயலாளர் அவர்கள் ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் பேசவிருக்கிறார்கள். ஹார்வார்டு மெடிக்கல் யுனிவர்சிட்டி என்பது ஒரு பிரிட்டிஷ் யுனிவர்சிட்டி. அதில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்கள் குறித்தான ஒரு விளக்க உரை இங்கே ஆற்றுவதற்கான வாய்ப்பு என்பது தமிழகத்திற்கு கிடைத்திருக்கிற ஒரு மிகப்பெரிய பெருமை.

அதேபோல் ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவமனை ஒன்று பால்டிமோரில் இருக்கிறது. அந்த பால்டிமோரில் இருக்கிற ஜான் ஹாப்கின்ஸ் மருத்துவமனை புளூம்பெர்க் பொது மருத்துவ பள்ளி, அதில் நான் ஒரு வகுப்பு எடுக்க இருக்கிறேன். அந்த வகுப்புகூட இந்த மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மைக்காக்கும் 48 போன்ற பல்வேறு நம்முடைய திட்டங்களின் சார்பில் பொது மக்கள் எந்த அளவிற்கு தமிழ்நாடு இன்றைக்கு அனுகிக்கொண்டிருக்கிறது போன்ற விஷயங்கள் மாணவர்களிடையில் விளக்க உரையாற்றவிருக்கிறேன்.

அங்கே நம்முடைய தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அவர்கள் அங்கே இருக்கிற மாணவர்களோடு Students Emergency Response Systems Presentation ஒன்றை அளிக்கவிருக்கிறார். இந்த இரண்டு பல்கலைக்கழகங்களிலும் Students Exchange Visitor Programme Presentation என்பது அங்கே அதற்காக பேசவிருக்கிறது. இது அங்க ஒப்புதல் பெறப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுவிட்டால் நிச்சயம் தமிழ்நாட்டின் மருத்துவக் கல்வி மாணவர்கள் ஹார்வார்டு பல்கலைக்கழகத்திற்கும், ஜான் ஹாப்கின்ஸ் சென்று அங்கே இருக்கின்ற மருத்துவ புரிதலைக் கொண்டு இங்கே மிக சிறப்பானவகையில் மருத்துவத்தை மேற்கொள்ளலாம். அதோடு மட்டுமல்லாது, ஒருசான்அன்டனோனியோ மையத்தில் உள்ள பெட்னா (Federation of Tamil Association North America) என்கின்ற அமைப்பு மாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கிறேன்.

அதற்கு அடுத்து ஹூஸ்டன் தமிழ் ஆய்வுகள் இருக்கை குறித்த ஒரு கருத்தரங்கம். ஏற்கனவே நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தமிழ் இருக்கை அமர்வதற்கு நிதி தந்திருக்கிறார்கள். அது சம்மந்தமான ஒரு கருத்தரங்கம் அந்த கருத்தரங்கத்திலும் பேச இருக்கிறேன். அடுத்து பெட்னா மாநாட்டில் பேச இருக்கின்றேன். உலக வங்கி செயலாளரை சந்திக்கவிருக்கிறோம், ஹார்வார்டு மருத்துவக் கல்வி பல்கலைக்கழகத்திலும் நம்முடைய ஜான் ஹாப்கின்ஸ் துறையின் செயலாளரும், நமது தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களும் பேசுவது மட்டுமல்லமல் பல்வேறு பரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கான முயற்சியும் மேற்கொள்ளவிருக்கிறோம். இது போன்ற நிகழ்வுகளுக்கான நாளை நான் செல்லவிருக்கிறேன்.

இரண்டு நாட்கள் கழித்து நம்முடைய துறையின் செயலாளரும் எம்ஜிஆர் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களும் அமெரிக்காவிற்கு வருகிறார்கள். வரும் 10ந் தேதி வாஷிங்டனில் இருக்கிற உலக வங்கி நிர்வாகிகளுடன் சந்தித்த பிறகு அன்று மாலை சென்னை திரும்புவோம்.

### உலக மருத்துவ தினம் 2024

இன்றைக்கு ஒரு மகிழ்ச்சியான நாள். இன்று உலக மருத்துவர்கள் தினம். இது வரைக்கும் 6 வருடங்களாக இந்த விருதுகள் தரப்படாமல் இருந்தது, இதற்கு முன் ஒவ்வொரு வருடமும் சிறந்து மருத்துவர்கள் என்று 10 பேருக்கு விருது கொடுப்பார்கள். அதிமுக ஆட்சி காலத்திலயே மூன்று ஆண்டுகள் அது தரப்படவில்லை, ஒரு 30 மருத்துவர்கள் தேர்வு செய்து வைத்திருந்தார்கள், அது தரப்படவில்லை என்பதை எங்களிடம் சமீபத்தில்தான் அந்த புகாரை கூறினார்கள், உடனடியாக அந்த 3 ஆணடுகளுக்கு 30 விருதுகளும், நானும் துறையின் செயலாளரும் பேசி மருத்துவர்கள் இந்த கோவிட் காலத்தில் மிக சிறப்பாக பணியாற்றியிருக்கிறார்கள், 10 என்பது போதாது 25 என்று வைத்துக்கொள்ளலாம் என்று கூறி நமது ஆட்சி அமைந்த 3 வருடத்திற்கு 75 மருத்துவர்கள் மற்றும் தற்போது புதிதாக 30 மருத்துவர்கள் என மொத்தம் 105 மருத்துவர்களுக்கு இன்றைக்கு விருது தர உள்ளோம் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பெருநகர சென்னை மாநகராட்சி அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.இராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், நிலைக்குழுத்தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர்.சாந்தகுமாரி மற்றும் உயரலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் அன்னியூர் சிவாவை ஆதரித்து பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில் நந்திவாடி ஊராட்சியில் அமைச்சர் தா.மோ அன்பரசன் வீடு வீடாக வாக்கு சேகரித்தார். உடன் இ. ஜோசப் அண்ணாதுரை – இ. எஸ். பெர்னார்ட், ஏ. கே. கருணாகரன் மற்றும் பலர் உள்ளனர்.

திரு.வி.க. நகர் பகுதி 71- வது வார்டு

# குடியிருப்புப் பகுதியில் மின் மாற்றி அமைக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் ப.தாயகம்கவி கேள்வி!



சென்னை, ஜூலை 2 -

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை யில் கேள்வி நேரத்தின் பொழுது திரு.வி.க. நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி அவர்கள் தன்னுடைய தொகுதியில் மின்மாற்றிகள் அமைத்து தர வேண்டி மின்சாரம், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அமைச்சர் தங்கம் தென்னரசு வினா எழுப்பினார்.

அதன் விபரம் வருமாறு:-

**ப.தாயகம்கவி :** திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, 71-வது வார்டு, ESI-A குடியிருப்புப் பகுதியில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 71- ESI - A குடியிருப்புப் பகுதிக்கு தற்போது “நீலாவதி 3 pole “-500 KVA மின்மாற்றிமூலம் மின்னூட்டம் வழங்கப்பட்டு வருகிறது. மின்மாற்றியின் திறன் தற்போது உள்ள மின் பளுவிற்கு போதுமானதாக இருக்கிறது. இப்பகுதியில், தாழ்வழுத்த மின்பாதையில் மேம்பாட்டு பணிகள் விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**ப.தாயகம் கவி :** திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் ESI குடியிருப்பு A பிளாக்கில் எனது கோரிக்கையை ஏற்று மின்மாற்றி அமைத்துத் தந்ததற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், திரு.வி.க. நகர் பகுதியில் வார்டு எண் 71-ல் பெரம்பூர் ஹை ரோடு, மேட்டுப்பாளையம், கர்நாட்டிக் மில் குடியிருப்பு,

வார்டு எண் 72-ல் தாஸ் நகர் 2-வது தெரு, தாஸ் நகர் 8-வது தெரு,அம்பேத்கர் நகர் 2-வது தெரு, திரு.வி.க. நகர் 8-வது தெரு, வ.உ.சி. நகர் 12-வது தெரு,கஸ்தூரி பாய் காலனி B-Block,வாசுகி தெரு,ஜோசப் தெரு, வார்டு எண் 73-ல் கிரே நகர் 2-வது தெரு, பிரகாஷ் ராவ் காலனி, பென்ஷனர்ஸ் லேன், வார்டு எண் 74-ல் பிரிஸ்லி நகர், டேங்க்மென் ரோடு, வார்டு எண் 75-ல் சுப்பராயன் 4-வது தெரு,

வார்டு எண் 76-ல் வெங்கடேசபத்தன் தெரு, படவட்டமன் கோயில் தெரு, வெங்கட்டம்மாள் சமாதி தெரு, கண்ணம்மாள் தெரு, நாராயணமேஸ்திரிதெரு ஆகியவற்றில் இதைப்போலவே மின்மாற்றி அமைத்துத்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** சென்னை மாநகராட்சி பகுதியில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இடங்களிலே எங்கெல்லாம் குறைந்த மின்ன ழுத்தம் இருக்கிறதோ அங்கே இருக்கக்கூடிய மின்மாற்றிகளை தேவையான மின் பளுவிற்கு ஏற்ப மாற்றியமைக்கக்கூடிய அந்தப் பணியினை தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய மின் பகிர்மான கழகம் மேற்கொண் டிருக்கிறது. அந்த அடிப்படையில் நம்முடைய உறுப்பினர் தாயகம் கவி அவர்கள், அவருடைய தொகுதிக்குட்பட்டிருக்கக் கூடிய வார்டுகள் 71, 72, 73 மற்றும் 74,75,76 ஆகியவற்றிலும் மின்மாற்றிகளை மாற்றித்தர வேண்டுமென்று அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையும் நிச்சயமாக அரசு ஏற்று அந்தப் பகுதிகளிலே தேவையான அளவிற்கு மின் பளுவினை கருத்திலே கொண்டு,

மின்மாற்றிகளை மாற்றி, புதிய மின்மாற்றிகளை அமைப்பதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ப.தாயகம் கவி:** என்னுடைய தொகுதியில் உள்ளவற்றை மட்டும் சொல்லியிருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மின்மாற்றிகளை அமைத்துத் தருவதாக சொன்ன அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே Strahans Road, Perambur Barracks சாலை சந்திப்பில் எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு அங்கு ஒரு துணை மின்நிலையம் வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதையும் விரைவில் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் இருக்கின்ற பழைய மின்மாற்றி கட்டமைப்புகளை அகற்றிவிட்டு, புதிய வடிவிலான box type-லான KMU-வை அமைத்துத் தந்தால், மழை நேரங்களில் ஏற்படுகின்ற மின் துண்டிப்பையும், அதேபோல் பறவையினங்களால் ஏற்படுகின்ற மின் துண்டிப்பையும் தவிர்க்க முடியும். எனவே, அதையும் அமைச்சர் அவர்கள் செய்து தருவாரா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் தங்கம் தென்னரசு:** புதிய துணை மின்நிலை யங்களைப் பொறுத்த மட்டிலே தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பல்வேறு சட்டமன்றப் பேரவை உறுப்பி னர்கள் தங்களுடைய பகுதிகளிலே துணை மின் நிலையங்களை அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இதுகாறும், அரசு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற இந்த 3 ஆண்டுக் காலத்திலே ஏறத்தாழ 388 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு நம்முடைய அரசு அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறது. அவற்றில் 330 இடங்களுக்கு, தேவையான இடங்களை கண்டறிந்திருக்கிறோம். அதிலே 246 துணை மின் நிலையங்களுக்கு நாம் பணிகளை மேற்கொள்வதற்கு ஆணைகளை வழங்கியிருக்கிறோம்.

இப்போது ஒன்றிய அரசு புதிதாக சொல்லியிருக்கக்கூடிய RDSS - Revamped Distribution Sector Scheme என்பதன் அடிப்படையில் ஒன்றிய அரசினுடைய பங்களிப்பாக 60 சதவிகிதமும், நம்முடைய பங்களிப்பாக 40 சதவிகிதமும் இருக்கக்கூடிய அளவிலே புதிய துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான ஒரு திட்ட அறிக்கையினை கேட்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 202 துணை மின் நிலையங்களை அமைப்பதற்காக நம்முடைய அரசு 2,300 கோடி ரூபாய் நிதியைப் பெற்று அதைச் செய்வதற்கான கருத்துருவினை ஒன்றிய அரசினுடைய பரிசீலனைக்கு நாம் கடந்த 31-2-2023-ல் அளித்தி ருக்கிறோம். அது தற்போதுவரை பரிசீலனையில் இருக்கிறது.

எனவே, அதை விரைவுபடுத்தி ஆணைகள் பெறப்பட்டால் இந்தப் பணிகளை மிக வேகமாக நம்மால் செய்ய முடியும். அதற்கிடையிலே எங்கெல்லாம் அவசரத் தேவைகளாக இருக்கிறதோ அந்த இடங்களிலும் நம்முடைய நிதியைக் கொண்டு செய்வதற்கான முயற்சி களையும் நம்முடைய மின்சார வாரியம் மேற்கொண்டிருக்கிறது. எனவே, அவையெல்லாம் வருகிறபோது நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய இடத்திலும் புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய மற்றோர் இடத்திலும் முறையான மின்சாரம் தடையின்றி வழங்குவதற்கான ஏனைய ஏற்பாடுகளையும் மின்சார வாரியம் நிச்சயமாக செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு ப.தாயகம்கவி கேள்விக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளித்தார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (01.07.2024) பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், கன்னிகாபுரம் குழந்தைகள் மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஓ.ஆர்.எஸ். கரைசல் மற்றும் வைட்டமின் ஏ திரவம் அடங்கிய மருந்துப் பெட்டகத்தினை வழங்கி, வைட்டமின் ஏ திரவத்தை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்குநர் டாக்டர் டி.எஸ்.செல்வவிநாயகம், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.